2015 பிப்ரவரி 18]

இதில் 5 சங்கங்களுக்குச் சொந்த மனைகள் உள்ளன. புத்தூர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும் சொந்த மனை கிடையாது. சொந்த மனை உள்ள மற்ற 5 சங்கங்களுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிவிரைவில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சொந்த மனை இல்லாத புத்தூர் சங்கத்திற்குத் தேவையான இடத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெற்றுத்தரும்பட்சத்தில், உறுதியாக அதற்கும் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுதியாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்று பதிலளித்திருக்கின்ற மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

8—

தரம் உயர்த்துதல்

***30140—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையிலுள்ள பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈகைக்கும் வாகைக்கும் இலக்கணமாய்த் திகழும் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் 4,523 போக்குவரத்து வாகனங்கள் மட்டுமே உள்ளன. பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினைத் தரம் உயர்த்த குறைந்தபட்சம் 7,000 போக்குவரத்து வாகனங்கள் இருக்க வேண்டும் என்று விதி உள்ளது. உடுமலைப்பேட்டைப் பகுதி அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடுமலைப்பேட்டை பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைத் தரம் உயர்த்துவதற்கு வாய்ப்புகள் குறைவாக உள்ளன என்று கூறினார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த ஆட்சிக் காலத்திலே, 2002 ஆம் ஆண்டில் பகுதிப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட்டது. தற்போது வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தாராபுரத்தில் செயல்பட்டு வருகிறது. உடுமலைப்பேட்டை வட்டம் மற்றும் மடத்துக்குளம் வட்டம் ஆகிய இரண்டு வட்டங்களை உள்ளடக்கிய பகுதியாக உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி உள்ளதால், இங்கு போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 7000-க்கும் குறைவாக வாகனங்களின் எண்ணிக்கை உள்ளது என்று கூறினார்கள். கடந்த

2015 பிப்ரவரி 18]

ஆண்டு அதற்கு முந்தைய ஆண்டுகளிலெல்லாம் 8000, 10,000 என வாகனங்கள் இங்கே பதிவாகி உள்ளன. வாகனங்களைப் பதிவு செய்வதற்கு ஒவ்வொரு முறையும் தாராபுரம் செல்ல வேண்டியுள்ளது. அதேபோன்று, பெர்மிட் போடுவதற்கும்கூட தாராபுரம் செல்லவேண்டியுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை அடிப்படையில், வருகின்ற இந்த நிதி ஆண்டிலேயே முழு முயற்சி எடுத்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, உடனடியாக உடுமலைப்பேட்டையிலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை அமைத்துத் தர முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 1-6-2002 முதல் செயல்பட்டு வரும் உடுமலைப்பேட்டை பகுதி அலுவலகத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் மூலமாகக் கடந்த ஆண்டில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்காக இரண்டு ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பணிகள் தொடங்கக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற ஆண்டிலேயே இந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை அமைத்துத் தருவதற்கு முன் வருகிறேன் என்று கூறியுள்ளார்கள். அதைக் கண்டிப்பாக செய்து தரவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

9—

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்

***6471—திரு. எம்.கே. முத்துக்கருப்பண்ணசாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சி வடக்கு, கிணத்துக்கடவு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை மூன்று ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா, எதிரிகளை மண்ணோடு மண்ணாக்கி, எதிர்க்கட்சிகளே இல்லாத நிலையாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீரங்கம் இடைத் தேர்தலிலே, தாங்கள் பெற்ற வெற்றி, மகத்தான வெற்றி. மக்கள் தந்த வெற்றி. துரோகிகளுக்கும் விரோதிகளுக்கும் வைத்தீர்கள் ஒரு முற்றுப்புள்ளி. இனிவரும் காலம் யாவும் தொடரும் அம்மா உங்கள் வெற்றிச் சரித்திரம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஒன்றியங்களை மூன்றாகப் பிரிக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகள் இனி இங்கு எப்போதும் இல்லை, உதிரிக் கட்சிகள்தான் உள்ளன என்று உலகத்திற்கு ஸ்ரீரங்கம் மக்கள் பறைசாற்றியுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வெற்றியைப் பெற்றுத் தந்த மாண்புமிகு மக்களின் முதல்வர், மங்காப் புகழ் பெற்ற மாதரசி, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனைகளின் சரித்திரமாய் விளங்குகின்ற இந்த நல்லரசு பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திலுள்ள 39 ஊராட்சிகளையும் கிணத்துக்கடவு ஒன்றியத்திலுள்ள 34 ஊராட்சிகளையும் சேர்த்து மூன்றாகப் பிரித்தால் அமைப்பு ரீதியாகவும், நிருவாக ரீதியாகவும் பொது மக்களின் வசதிக்கும் உகந்ததாக இருக்கும். மேலும், கேரள எல்லையிலிருந்து நீண்டிருக்கின்ற இவ்விரண்டு ஒன்றியங்களும் இரண்டு இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டதோடு, மூன்று தொகுதிகளுக்குள் பிரிந்துள்ளன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து, மாற்றியமைத்துக் கொடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசாணை எண் 131-ல் உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துதல், பிரித்தல் மற்றும் சேர்த்தல் தொடர்பான நடைமுறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல், தரமுயர்த்துதல், சேர்த்தல் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகத் தீர்மானம்